THE HINDU - TAMIL

Dated: 24. 10. 2024

### வாக்காளர் பட்டியல் திருத்த பணிகள் அக்.29-ல் தொடக்கம்

# அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுடன் இன்று ஆலோசனை

### சத்யபிரத சாஹு தலைமையில் நடக்கிறது

● சென்னை

வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் அக்.29-ம் தேதி தொடங்குகிறது. இதுதொடர்பாக, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் இன்று தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு ஆலோசனை நடத்துகிறார்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம் செய்தல், திருத்தம் செய்தல் போன்றவற்றுக்கான பணிகள் வரும் அக்.29-ம் தேதி தொடங்குகிறது. அன்று காலை வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படுகிறது. இப்பட்டியல் அடிப்படையில், திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. வரும் நவ.28-ம் தேதி வரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல், திருத்தம் செய்வதற்கு விண்ணப்பிக்கலாம்.

வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் நடைபெறுவதையொட்டி தலைமைச் செயலகத்தில், தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு தலைமையில் இன்று ஆலோசனை நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட தேசிய கட்சிகளான காங்கிரஸ், பாஜக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், பகுஜன் சமாஜ், ஆம் ஆத்மி கட்சி, பி.ஏ. சங்மாவின் தேசிய மக்கள் கட்சி ஆகியவை மற்றும் மாநில கட்சிகளான திமுக, அதிமுக, தேமுதிக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை அழைக்கப்பட்டுள்ளன. இக்கூட்டத்தில், வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளின் நடைமுறைகள், சிறப்பு முகாம் ஏற்பாடுகள் குறித்து கருத்துகள் பரிமாறப்பட உள்ளன.

**புதிய தேர்தல் அதிகாரி யார்?**

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹுவுக்கு சமீபத்தில், பால்வளம், மீன்வளம், கால்நடை பராரிப்புத்துறை செயலர் பதவி கூடுதலாக வழங்கப்பட்டது. இந்நிலையில், புதிய தலைமை தேர்தல் அதிகாரியை நியமிப்பதற்கான 3 பேர் அடங்கிய பட்டியலை அனுப்பும் படி, தமிழக அரசுக்கு இந்திய தேர்தல் ஆணையம் கோரியது. இதையடுத்து, தமிழக பொதுத்துறை, 3 அதிகாரிகளின் பெயர்ப்பட்டியலை தயாரித்து அனுப்பியுள்ளது.

இதில், பொதுப்பணித்துறை செயலர் மங்கத்ராம் சர்மா, தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் (டான்சிட்கோ) தலைவர் தர்மேந்திர பிரதாப் யாதவ் மற்றும் மூத்த அதிகாரி ஒருவர் பெயரும் இடம் பெற்றுள்ளது. வரும் அக்.29ம் தேதி வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் தொடங்க உள்ள நிலையில், விரைவில் புதிய தலைமை தேர்தல் அதிகாரி யார் என்பதற்கான அறிவிப்பு வெளியாகும் என தேர்தல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

Daily Thanthi Dated: 24.10.2024

# தமிழகத்தின் புதிய தலைமை தேர்தல் அதிகாரி யார்?

## 3 ஐ.ஏ.எஸ். அதிகாரி பெயர் பரிந்துரை

சென்னை, அக்.24-

தமிழகத்தின் தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகுவுக்கு தமிழக அரசில் கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. தலைமை தேர்தல் அதிகாரியாகஇருக்கும் நிலையில், பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை முதன்மைச் செயலாளராகவும் அவர் கூடுதல் பொறுப்பு வகிப்பார் என்று அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த நிலையில் புதிய தேர்தல் அதிகாரி ஒருவரை நியமிப்பதற்காக 3 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் பெயர் பட்டியலை அனுப்ப வேண்டும் என்று தமிழக அரசுக்குஇந்திய தேர்தல் கமிஷன் கடிதம் எழுதியது. அதைத் தொடர்ந்து 3 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் பெயர்ப் பட்டியலை பொதுத்துறை தயாரித்துள்ளது.

அந்தப் பட்டியலில் மங்கத்ராம் சர்மா, தர்மேந்திர பிரதாப் யாதவ் மற்றும் ஒரு அதிகாரியின் பெயர் இடம் பெற்றுள்ளது. இந்தப் பட்டியல் இந்திய தேர்தல் கமிஷனுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. அந்த மூன்று பேரில் ஒருவரை இந்திய தேர்தல் கமிஷன் தேர்வு செய்து அதற்கான அறிவிப்பை வெளியிடும்.தற்போது தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி நடைபெற உள்ளது. அதற்கு முன்பாக வரும் 29-ந் தேதியன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். அதற்கு முன்பு, தமிழகத்தின் புதிய தலைமை தேர்தல் அதிகாரி யார்? என்பதற்கான அறிவிப்பை இந்திய தேர்தல் கமிஷன் வெளியிட வாய்ப்புள்ளதாகதேர்தல் அலுவலக வட்டாரத்தில் கூறப்பட்டது.